# 1.மகிழ்ச்சியாக வாழ்ந்தவன்

ஒரு சிறிய நாடு. அந்த நாட்டின் அரசன் ஒரு சமயம் நோய் வாய்ப்பட்டிருந்தான். மருத்துவர்கள் பலர் வந்து பார்த்து, சிகிச்சை அளித்தனர். என்ன நோய் என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை நோயும் குணமாகவில்லை மிகவும் வருந்தினான் அரசன். “தன் நோயைக் குணப்படுத்துபவருக்கு நாட்டில் பாதியை அளிப்பதாக” அரசன் அறிவித்தான்.

ஆட்சியில் உள்ளவர்கள் கூடி ஆலோசித்தனர். எந்த வழியும் புலப்படவில்லை. ஒரு அறிஞர் தனக்குத் தோன்றிய யோசனையைக் கூறினார். அதாவது “மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தும் ஒரு மனிதனைக் கண்டுபிடித்து, அவனுடைய அங்கியை (சட்டை) கழற்றி வந்து, அரசனுக்கு அணிவித்தால், நோய் குணமாகிவிடும்” என்றார். கவலையில்லாமல் மகிழ்ச்சியோடு வாழும் மனிதனைக் கண்டு பிடித்து வருமாறு அரசன் உத்தரவிட்டான். காவலர்கள் நாடு முழுவதும் தேடி அலைந்தார்கள். ஆனால், அத்தகைய மனிதன் ஒருவன் கூட அகப்படவில்லை. வாழ்க்கையில் முற்றிலும் திருப்தியுடன் மன மகிழ்ச்சியோடு வாழும் ஒரு மனிதனைக் கூட நாட்டில் காணவில்லை. பணக்காரனாக இருந்தால், அவனுக்கு உடல் நலமில்லை, உடல் நலத்தோடு இருப்பவனுக்குப் போதிய செல்வம் இல்லை.

உடல் நலமும், பணமும் இருந்தால் பிள்ளைகள் இல்லையே என்ற கவலை; செல்வமும் உடல் நலமும் இருந்தால், மனைவி சரி இல்லை. பொல்லாத மனைவியால், நாள்தோறும் சச்சரவு; நிம்மதி இல்லை





பிள்ளைகள் இருந்தால், தீயவர்களாக இருந்தனர். இப்படியாக, ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு மனக்கவலை இருந்து கொண்டு இருந்தது.

ஒரு நாள், இரவில் அரசனின் குமாரன் ஒரு குடிசையின் பக்கம் போய்க் கொண்டிருந்தான். அப்போது அந்தக் குடிசையிலிருந்து ஒரு குரல் கேட்டது. அதாவது: “கடவுள் அருளால் இன்றைய வேலை முடிந்தது. வயிற்றுக்கும் போதுமான அளவு உணவு கிடைத்தது. இனி அமைதியாகப் படுத்து உறங்கலாம். இறைவன் கருணையே கருணை! எனக்கு வேறு என்ன வேண்டும்?”

இந்தக் குரலைக் கேட்டான் இளவரசன். அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. இளவரசன் காவலர்களை அழைத்து, அந்தக் குடிசைக்குள்ளே இருந்த மனிதனின் சட்டையைக் கொண்டு வந்து அரசனிடம் அளிக்கும்படி உத்தரவிட்டான். மேலும், அந்தக் குடிசைவாசி எவ்வளவு கேட்டாலும் அதைக் கொடுக்கும்படி சொன்னான். காவலர்கள் உடனே அந்த ஏழையின் குடிசைக்குள் சென்றனர். அங்கே கவலை இல்லாமல், கடவுளை வழிபாடு செய்து கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டனர். ஆனால், அவன் மிகவும் ஏழ்மையில் இருந்தான். அவனிடம் சட்டை எதுவும் இல்லை.

# ௨.மூடத்தனத்தால் ஏமாந்த வியாபாரி

கங்கைக் கரையில் சிறிய நகரம் ஒன்று இருந்தது. அங்கே காவி உடை அணிந்த ஒருவன் வசித்து வந்தான். அவன் யாரிடமும் எதுவும் பேசுவதில்லை. அதனால், அவனை மௌனசாமி என்று எல்லோரும் அழைத்தனர். தினமும் அந்த மௌனசாமி வீடுவீடாகச் சென்று, பிச்சை எடுத்து உண்பது வழக்கம்.

மௌனசாமி வழக்கம் போல் ஒரு நாள் பிச்சை எடுக்கச் சென்றான். அப்பொழுது, ஒரு வீட்டில் வியாபாரியின் மகள் பிச்சை போட வந்தாள். அவள் மிக அழகானவள். திருமணம் ஆகாதவள். அவளைக் கண்டதும் மயங்கிய மௌனசாமி. மெய்மறந்து, 'கடவுளே!' என்று பெருமூச்சு விட்டான். அந்த வார்த்தை காதில் விழுந்ததும், ஓடி வந்து பார்த்தான் வியாபாரி.

மௌனசாமியோ அப்பொழுது கண்களை மூடியபடியே அழகியைநினைத்து, கற்பனையில் ஆனந்தமாக மிதந்து கொண்டிருந்தான். வியாபாரி உடனே மௌனசாமியின் காலில்விழுந்து வணங்கி, "மௌனசாமியாகிய நீங்கள் வாய் திறந்து,'கடவுளே'! என்று சொன்னதில் ஏதோ ஒரு ரகசியம் உள்ளது. கருணை கூர்ந்து, தாங்கள் அதை விளக்கிக் கூறவேண்டும்" என்று பணிவோடு வேண்டினான். வியாபாரியின் மூடத்தனத்தை அறிந்த மௌனசாமி, சூழ்ச்சி செய்ய தீர்மானித்தான். வியாபாரியே! உன்னுடைய சொத்து சுகம் யாவும் அழிந்து, உனக்கு மரணம் நேரப் போவதை ஞானப்பார்வையினால் உணர்ந்தேன், அதனால், என்னை மறந்த நிலையில் மௌனம் கலைந்து, 'கடவுளே' என்று கூறிவிட்டேன்" என்றான் மௌனசாமி.







‘சொத்து, சுகம், அழிவு, மரணம்’ என்ற சொற்களைக் கேட்டதுமே வியாபாரி நிலைகுலைந்து, தள்ளாடிய நிலையில்,“சுவாமி இதற்கு ஒரு பரிகாரம் கூறி, என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று மன்றாடினான்.

மௌனசாமி கண்களை மூடி, சிறிது நேரம் யோசித்து, வியாபாரி, தான் விரித்த வஞ்சக வலையில், சரியாக விழுந்து விட்டான் என்பதை அறிந்து, உள்ளம் பூரித்தான்.

“நீ மிகவும் நல்லவன், நீண்ட காலம் சொத்து சுகத்துடன் வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கூறுகிறேன். உன் பெண்ணுக்கு கெட்ட நேரம் தொடங்கி விட்டது. அவளுக்குத் திருமணம் செய்து வைத்தால், அன்று இரவே அவள் கணவனை இழந்துவிடுவாள்.

உனக்கும் மரணம் நேரிடும். ஆகையால், உன் மகளை ஒரு கூடையில் வைத்து மூடி, அதன் மேலே ஒரு விளக்கை ஏற்றிவைத்து, இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு கங்கையில் மிதக்க விடு” என்று கூறி புறப்பட்டு விட்டான் மௌனசாமி. அவன் சொன்னபடியே வியாபாரி செய்தான். கங்கையில் வியாபாரியின் மகளுடன் கூடை மிதக்கிறது.







மௌனசாமி ஆவலுடன் வேறு ஒரு பகுதியில் காத்திருக்கிறான். அடுத்த நாட்டு இளவரசன், கங்கைக் கரையில் இரவு முகாம் போட்டிருந்தான். மறுநாள் என்ன செய்வது என்று இளவரசனும் பரிவாரங்களும் யோசனையில் ஆழ்ந்திருந்தனர். அப்பொழுது விளக்குடன் கூடை ஒன்று மிதந்து வருவதைக் கண்டான் இளவரசன்.

அதை எடுத்து வரும்படி கட்டளையிட்டான். கூடை கொண்டு வரப்பட்டது. திறந்ததும் வியாபாரியின் மகள் அழுது கொண்டே எழுந்து விவரத்தைக் கூறினாள். இளவரசன் அவளைத் தேற்றி, காந்தர்வ மணம் செய்து கொண்டான். மௌனசாமி ஏமாற்றம் அடையாமல் இருக்க அதே கூடையில் கருங்குரங்கு ஒன்றை வைத்து மூடி, விளக்கை ஏற்றி வைத்து, மிதக்கவிட்டனர் இளவரசனின் குழுவினர்.

கரையில் ஆவலோடு காத்திருந்த மௌனசாமி, கூடையைக் கண்டு குதித்து ஓடி, அதைத் தூக்கிச் சென்று திறந்தான். கூடைக்குள் இருந்த கருங்குரங்கு கோபத்துடன் மௌனசாமியைக் கடித்து, சின்னாபின்னமாக்கி விட்டது. அவன் வெளியில் தலைகாட்டவில்லை.

காவி உடையில் திரிந்து, மூடத்தனமானவர்களை ஏமாற்றுகின்றனர் சிலர்.





